**தலைப்பு 221 - தொழில் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 221 - தொழில் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில், ஓய்வுபெற்ற மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2,202,325 ஆக இருந்தது, இதில் ரூபா 129,316 நிலுவைத் தொகை 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவியது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக இதுவரை ரூபா 514,775.06 தொகையா கடன் மீதி வசூலிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை வசூலிக்க தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பணிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 957,800, ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 61,050 ஆன மீதிகள் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவையாகவும் ரூபா 138,040 தொகை 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை ஆகும். | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ஓய்வுபெற்ற, பணிநீக்கம் செய்யப்பட்ட, மற்றும் பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அறவிடப்படாத கடன் நிலுவையிலிருந்து ரூபா 514,775.06 தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.<br><br>நிலுவை மீதிகள் அறவிடப்படாமைக்கு பிணையாளர்கள் இல்லாதிருந்தமை குறிப்பிட்ட அதிகாரிகளின் வசிப்பிடத்தை | கடன் நிலுவையை வசூலிக்க தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உறுதி செய்ய இயலாமை, அதிக செலவு காரணமாக வழக்குகள் தாக்கல் செய்ய இயலாமை ஆகியவை காரணமாக அமைந்திருந்தது. | |
| (iii) | 12 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. | அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பதற்காக 2024.05.29 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2024 இன் (4)(i) இன் படி, 2024.12.31 ஆந் திகதிக்கு முன் இந்த கடன் நிலுவைகளில் இருந்து அறவிடப்பட முடியாத கடன் மீதிகளை பதிவழிப்பு செய்ய ஏற்பாடு செய்யப்படும். | சுற்றறிக்கை விதிகளின்படி கட்டணம் வசூலிக்க தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் மீதமுள்ள நிலுவைத் தொகை தொடர்பில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | மரணமடைந்த 6 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 513,432 ஆகும், இதில் ரூபா 379,472 தொகை 1-3 ஆண்டுகளுக்கு இடையிலும் ரூபா 133,960 தொகை 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகவும் இருந்தது. | அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பதற்காக 2024.05.29 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2024 இன் (4)(i) 2024.12.31 ஆந் திகதிக்கு முன்னர் இந்த கடன் மீதிகளில் அறவிடப்பட முடியாத கடன் மீதிகளை பதிவளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் நிலுவைகளை வசூலிக்க அதிகபட்ச நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் மீதமுள்ள நிலுவைகளை சுற்றறிக்கை விதிகளின்படி கையாள வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் விலை கேள்வி வைப்பு கணக்கில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 68,566,929 தொகையாக காணப்பட்டதுடன், அந்த மீதியினுள் ரூபா 67,098,666 தொகையானது இரண்டு வருடங்களை கடந்த வைப்புக்கள் ஆகும் . அந்த வைப்பு மீதிகளிடையே ரூபா 67,018,647 மீதியானது மெஹவர | திணைக்களத்தின் விலை கேள்வி வைப்பு கணக்கின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மீதியானது ரூபா 68,566,929 தொகையாக காணப்பட்டதுடன், அந்த மீதியினுள் 02 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 67,098,666 ஆகும். அவற்றுள் மெஹவர பியச | வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பியச கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டது. | கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரியதாக ரூபா 67,018,647 தொகையான வைப்பு மீதியில் தற்போது ரூபா 16,327,781 எஞ்சியுள்ளது. | |
| (ii) | மீளாய்வு ஆண்டினுள் தொழில் திணைக்களத்தின் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு உரிய பொது வைப்பு கணக்குகளுக்கு தீர்ப்பனவு செய்யப்படாத வைப்பு மீதியான ரூபா 894,089,604 தொகைக்கு உரிய தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த மீதிகளிடையே 10 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 71,131,941 தொகையும் 2 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 177,155,982 தொகையும் காணப்பட்டது. | கொழும்பு பிரதேசத்தின் நீதவான் நீதிமன்றத்தின் மூலம் ஊழியர் நலன்புரி நிதியத்தின் அறவீட்டு பிரிவின் ஊடாக பொது வைப்பு கணக்கிற்கு கிடைக்கும் அறவீடுகளை தீர்ப்பனவு செய்வதற்கான நிலையான குழு ஒன்று நியமிக்கப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடைமுறை ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை. | பொது வைப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்து அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதிய பிரிவின் தகவல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 22,462,587 தொகையான சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சொத்துக்களின் கொள்வனவாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் ஊழியர் நலன்புரி நிதியத்தின் நிதிக்கூற்றுகளிலும் சொத்துக்களாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து இது தொடர்பில் அறிவுரை கோரப்பட்டுள்ளமையால் இயலுமான அளவில் துரிதமாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | சொத்துக்கள் மீதியினை தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டுநிதி இணக்கக்கூற்றில் ஏனைய தலைப்புக்களில் இருந்து முற்பண 'பி' கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்களின் மீதி மற்றும் திறைசேரியன் கூற்றுக்களின் பிரகாரமான செலவு ஆகியவற்றுக்கு இடையே ரூபா 193,403 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஏனைய தலைப்புகளினால் முற்பண 'பி' கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்களை கணிப்பீடு செய்யும் போது இந்த வழு ஏற்பட்டுள்ளதுடன், இதன் பின்னர் அவ்வாறான தவறு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கட்டுநிதி மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**(உ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் அந்த பதிவேடு மாவட்ட மற்றும் பிராந்திய அலுவலகங்களின் தகவல்களை நாளதுவரையாக பேணியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு ஒன்று பேணி செல்லப்படுவதுடன் மாவட்ட மற்றும் பிராந்திய அலுவலகங்களின் தகவல்களை நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 செலவின விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 126,000,000 தொகையான நிதியேற்பாடுகளில் மீளாய்வாண்டினுள் எந்த ஒரு செலவினமும் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் நூற்றுக்கு நூறு சதவீதமான நிதியேற்பாடும் எஞ்சி இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 221-1-1-2-2104-66 இலக்கமுடைய செலவின விடயத்திற்கு உரியதாக மெஹவர பியச கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு உரியதாக இறுதி பட்டியல்களை செலுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் செயறிட்ட மதியுரை நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிராமையால் இந்த நிதியேற்பாடு மற்றும் 221-1-1-2-2102-11 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு உரியதாக தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இன் பிரகாரம் மூலதன செலவின வரையறைகள் மற்றும் அவசர கொள்வனவு தேவைப்பாடுகள் ஏற்படாதிருந்த காரணத்தால், இந்த நிதியேற்பாடு பயன்படுத்த முடியாது இருந்தமை. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 14 செலவின விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,381,150,000 நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்படியாக ரூபா 102,105,930 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த சேமிப்பின் சதவீதம் 48 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் நிலவியது. | பெறுகை ஆவணங்களை தயாரிப்பதிலான தாமதங்கள் மற்றும் எதிர்பார்த்தவாற திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமை. தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 3/2022 இன் பிரகாரம் மூலதன செலவினம விடயங்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால், அவசர கொள்வனவுக்கான தேவைப்பாடு எழவில்லை என்பது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

<u>அவதானிப்புகள்</u>

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நி.பி.770(4) | | நிறுவனங்களுக்கு சேதமடைந்த பயன்படுத்த முடியாத வாகனங்களை இனம் காணுவதற்கு விசேட மதிப்பாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டு ஓட்ட நிலையில் காணப்படும் எனினும் பொருளாதார ரீதியாக பயனற்ற அல்லது வேறு விடயங்களின் அடிப்படையில் கைத்தவிர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் இனம் காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொழில் திணைக்களத்தில் காணப்படும் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக 2024.05.30 திகதிய ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதுடன் வாகன கைத்தவிர்ப்புகள் தொடர்பில் மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.3 | | ஒப்பந்தங்களை கையளிக்கும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களில் கட்டிடங்கள் திணைக்களத்தின் முன் மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 480,719,000 ஒப்பந்தத்திற்காக தொழில் | பெறுகைகள் வழிகாட்டல் பின்பற்றப்பட்டு மதியுரை சேவைகள் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர் தொழில் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு நிதி அல்லது நிதியேற்பாடு | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்தினால் பணம் செலுத்தப்பட்டிருந்தது. கட்டிடங்கள் திணைக்களம் அந்தப் பணிகளை ரூபா 272,689,000 தொகைக்கு உப ஒப்பந்தத்திற்கு கையளித்திருந்தது. இந்த கிரயத்திலான வேறுபாடு சேவை பெற்றுக் கொள்ளும் பணியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் தொழில் திணைக்களத்தின் முறையான கண்காணிப்பு ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை. | வழங்கப்படுவதில்லை. | |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3 ஆம் அத்தியாயம் | தொழில் திணைக்களம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு தேவையான நிர்மாண பணிகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டி நடைமுறைகள் பின்பற்றப்படாது 22 சந்தர்ப்பங்களில் ரூபா 346,651,027 பெறுமதியான 22 ஒப்பந்தங்கள் கட்டிடத் திணைக்களத்திற்கு நேரடியாக கையளிக்கப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் தொழில் திணைக்களத்தின் மூலம் கட்டிடத் திணைக்களத்திற்கு காசு அல்லது நிதியேற்பாடு வழங்கப்பட்டு முன்பு போல நிர்மாண பணிகளை நேரடியாக கையளித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் கட்டிடத் திணைக்களத்திடமிருந்து மதியுரை சேவைகளை மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கும் அதற்கான மதியுரை கட்டணங்களை அந்த திணைக்களத்திற்கு செலுத்துவதற்கும் திணைக்களத்தின் மூலம் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்தல் பெறுகை நடைமுறையின் ஊடாக மேற்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 செப்தம்பர் 27 ஆந் திகதி 2142/90 ஆம் இலக்க வர்த்தமானி | - | வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற்சாலைகளின் பதிவு மற்றும் நீராவி பிராய்லர்களின் பதிவு செய்யும் நடவடிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | தற்போது திருப்திக்கொள்ளக்கூடிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அதற்காக மாவட்ட தொழிற்சாலை பரிசோதகர் பொறியியல் அலுவலக மட்டத்தில் பதிவு செய்யும் பதிவேட்டினை பராமரிக்கப்படுவதுடன் பதிவினை அதிகரிப்பதற்கு மின் அஞ்சல் மூலம் மற்றும் தபால் மூலம் நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. மேலும் தொழில் திணைக்களத்தின் தரவு கட்டமைப்பின் ஒரு மொடியுலாக மாவட்ட தொழிற்சாலை பரிசோதகர் பொறியியல் அலுவலக பிராய்லர் பதிவு உள்ளடங்களாக ஏனைய தரவுகளை உள்ளடக்குவதற்கு ஆரம்பக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை. | பிராய்லர் பதிவு செய்யும் நடவடிக்கை முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

**2.3 ஒப்பந்தங்கள் தொடர்பில் வரி அறவிடப்பட்டிராமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில் திணைக்களத்தின் தொழில் செயலக அலுவலக கட்டிடத்தில் முதலாம் தளத்தின் உள்ளக நிர்மாண பணிகளுக்காக 2022 மார்ச் 31 ஆம் திகதி ரூபா 60,005,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திற்கு மெஹவர பியச கட்டிடத்தின் 12 மற்றும் 16 ஆம் | இதற்கு உரிய அனைத்து தரப்பினருடனும் 2024.01.08 ஆம் திகதி நடத்தப்பட்ட செயல் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் 95 சதவீதமான பௌதீக செயல் முன்னேற்றம் இதுவரையிலும் அடையப்பட்டுள்ளது. எனினும் நிர்மாணங்களை பொறுப்பேற்பதற்கான | கட்டுமான ஒப்பந்தம் முறையான கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தளங்களின் உள்ளக நிர்மாணிப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 37,632,000 தொகையும் மாற்றல்களாக சேர்க்கப்பட்ட ரூபா 99,637,000 தொகையும் ஒப்பந்த கையடிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த ஒரு செயல் முன்னேற்றமும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனையின் போது குறைபாடுகளாக இனம் காணப்பட்டுள்ள அலுமினியம் ஜன்னல் சட்டங்களை புதிதாக பொருத்துதல், முன்னர் இனம் காணப்பட்டிராத தற்போது இனங்காணப்பட்டுள்ள தொழில்நுட்பத்துடன் ஆன பைபர் இணையதள விநியோகத்திற்கான இணைக்க கூடிய Manageable Switches பொருத்துதல் போன்ற பணிகளை துரிதமாக நிறைவு செய்து பணியை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெஹவர பியச கட்டிடத்தின் 04 ஆம் தளத்தில் சிற்றுண்டிச்சாலையின் உள்ளக நிர்மானங்களுக்காக 2021 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 72,000,000 ஆன தொகை கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இதன் பணி மேற்கொள்ளப்பட்டிராததுடன், இந்த பணத்தில் ரூபா 67,957,507 தொகை மீண்டும் தொழில் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பணிகள் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மெஹவர பியச கட்டிடத்தின் 04 மாடியில் சிற்றுண்டிச்சாலையின் உள்ளகப் பணிகளை நிர்மாணிப்பதற்காக கட்டிட திணைக்களத்திற்கு ரூபா 72,000,000.00 ஆன தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த பணத்தில் ரூபா 3,968,000.00 தொகை மெஹவர பியச கட்டிடத்தின் தலைமை செயற்பாட்டு அறையின் இடைத்தடுப்புகளை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பணம் கட்டிடங்கள் திணைக்களத்தினால் 2023.12.31 ஆம் திகதி மீள வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்ற வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கேகாலை மாவட்டத்தின் தொழில் அலுவலகத்தின் சேவை வசதிகளை மேம்படுத்துவதற்காக கட்டிடங்கள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 31,000,000 தொகையானது 2021 பெப்ரவரி 17 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணி இதுவரையிலும் நிறைவு செய்யப்படாது காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுநோய் நிலைமையை மற்றும் பொருளாதார பின்னடைவு காரணமாக இந்த பணி இடை நடுவில் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் சந்தையில் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலை அதிகரித்த காரணத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான பணிகளுக்கு மாத்திரம் மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்பட்டு கட்டிடத்தில் தரை தளத்தில் சேவை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.<br><br>எஞ்சிய நிதியேற்பாட்டின் மூலம் பொதுமக்கள் தங்கி இருப்பதற்கான இடம் ஒன்றினை அமைப்பதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதுடன் அந்தப் பணி நிறைவடைந்த பின்னர் எஞ்சிய தொகை தொழில் திணைகளத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதியேற்பாடுகளை வழங்கிய பணிகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 127,687,802 தொகையான 06 நிர்மாண ஒப்பந்தங்களில் ரூபா 48,663,802 ஆன 4 பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 72,000,000 தொகையான கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் | மேற்கொள்ளப்படும் பணிகளை இந்த வருடத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கையளிக்கப்பட்ட மெஹவர பியச கட்டிடத்தின் 4 ஆம் தளத்தின சிற்றுண்டிச்சாலையின் உள்ளக நிர்மாணங்களை செய்யும் பணி நிறைவு செய்யப்பட்டிராததுடன், அந்த நிதியேற்பாடுகளில் மெஹவர பியச கட்டிடத்தின் பிரதான செயல்பாட்டு அறையின் இடைத் தடுப்புக்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,968,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் அச்சீட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2007 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் ரூபா 21,884,083 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த அச்சீட்டு இயந்திரம் மற்றும் அதற்கு மேலதிகமாக அச்சகத்தின் செயல்பாட்டில் காணப்படும் கணினி இயந்திரம் ஒன்று, பங்கீட்டு இயந்திரம் மற்றும் கடுதாசி வெட்டும் இயந்திரம் (Paper Cutter) ஆகியவை காணப்பட்டன. இந்த அச்சகத்தின் அச்சீட்டு பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நிரந்தரமான பதவியணி மற்றும் மூலப்பொருள் இல்லாத காரணத்தால் அதன் வளங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. 2019-2022 ஆம் ஆண்டுகளின் மாதிரி படிவங்களை வெளிவாரி நபர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு ரூபா 36,236,875 கிரயம் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களை இயக்குவதற்கு தொழிலாளர் திணைக்களத்தில் தகுதியான உத்தியோகத்தர்கள் இல்லாததால், புதிய பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பதவியணி மீளாய்வில் கருத்திற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டு, சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்பது. | திணைக்களத்தின் வளங்களை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு முதல் மாதிரி படிவம் நலனாளிகளால் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ரூபா 7,855,576 தொகை செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தொழில் அலுவல சுற்றுலா விடுதியினை பழுது பார்க்கப்பட்டிருந்த போதிலும், உரிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்து இருக்காத காரணத்தால் சுற்றுலா விடுதி பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை எண் 03/2022 இன் பிரகாரம் பொருட்களை கொள்வனவு செய்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால், அம்பாந்தோட்டை மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் சுற்றுலா விடுதி ஆகியவற்றுக்கு தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே இதுவரையிலும் பயன்படுத்தப்படாது அலுவலக கட்டிடம் ஏனைய அலுவலகங்களை நிறுவுவதற்காக வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமையால் அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளமை. | திணைக்களத்தின் வளங்களை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா மாவட்டத்தின் புதிய தொழில் அலுவலகத்தின் இடைத்தடுப்புகளை தயாரித்தல் மற்றும் இணையதள கட்டமைப்பினை உருவாக்குவதற்கு மதிப்பிடப்பட்ட கிரயமாக ரூபா 4,000,000 மதிப்பீடு | இப்பணி தொடர்பான எஞ்சிய தொகையான ரூபா 7,559,023 ஆனது 2024 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. முன்னர் குறிப்பிட்டது போன்று கம்பஹா மாவட்ட செயலகக் கட்டிட நிர்மாணப் பணிகள் தொடர்பிலான மாறுபாடாக | ஒதுக்கப்பட்ட பணிகளை முறையாக மேற்கொள்ள நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு 2023 திசெம்பர் 27 ஆம் திகதி ரூபா 11,727,646 தொகையான நிதியேற்பாடு கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணி 2024 மே மாதம் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | (Variation) me;j ஆலோசனை நிறுவனம் தொடர்பில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2024.06.25 ஆந் திகதியில் உள்ளபடியாக இதன் முன்னேற்றம் சுமார் 40% ஆகும். | |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் கொக்கல விடுதியின் மலசல கூட கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 6,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பணிகளை நிறைவு செய்ய தவறியிருந்தது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி அத்தியாவசிய பணிகள் மட்டுமே செய்யப்பட வேண்டும், கொக்கல விடுதியில் செய்ய வேண்டிய பணிகள் கட்டிட பராமரிப்பு பிரிவால் ரூபா 90,140 செலவில் செய்யப்பட்டது.<br><br>தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகள் தொடர்பில் கட்டுநாயக்க விடுதியில் ஏற்பட்ட குறைபாடுகள் அவசரமாக திருத்தப்பட வேண்டியவை அல்ல என்பதல், 2023 ஆம் ஆண்டு திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், அந்த கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட உள்ள அனைத்து பழுதுபார்த்தல் பணிகளையும் ஆராய்ந்த பின், அனைத்து பணிகளும் ஒரே செயற்திட்டமாக கருதப்பட்டு, 2024 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படவுள்ளது. | நிதியேற்பாடு மற்றும் ஒதுக்கீடுகள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மெஹவர பியச பொது வசதிகள் மற்றும் கழிவு முகாமைத்துவம், பெயர் பலகைகள், பார்வையாளர் அடையாள அட்டைகள் போன்ற வசதிகளை வழங்குவதற்காக ரூபா 55,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் பேச்சுவார்த்தைகள் இன்னும் விலைக் கோரல் கட்டத்திலேயே இருப்பதாக தெரியவந்துள்ளது. | • அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டு முயற்சியின் கீழ், மெஹவர பியச கட்டிடத்தின் 04 வது மாடியில் உள்ள உணவகம், 31 வது மாடியில் உள்ள உணவகம் போன்ற பொது வசதிகளின் செயல்பாடுகள் மாற்றப்படுகின்றமையால் , தொழில் தலைமைச் செயலகத்தின் தளங்கள் வேறு நிறுவனங்களக்கு வழங்கப்பட உள்ளமையால், அதனால் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் முன்மொழியப்பட்ட கழிவு முகாமைத்துவ திட்டத்தை இப்போதே திருத்த வேண்டும்.<br><br>• பெயர் பலகைகள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.<br><br>• பார்வையாளர் அடையாள அட்டை கட்டமைப்பை அமைக்கும் பணிக்காக பல தடவைகள் விலைக்கேள்வி அழைப்பு செய்யப்பட்ட போதும் எந்த நிறுவனமும் விலையை சமர்ப்பிக்கவில்லை. | ஒதுக்கப்பட்ட பணிகளை முறையாக மேற்கொள்ள நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஜனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 01 இன் படி, ஒட்டுமொத்த பதவியணிக்கும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பணிப்பொறுப்பு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடல் ஆராய்ச்சி பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள், ஒவ்வொரு அலுவலகத்திலும் ஆண்டுதோறும் நடத்தப்படும் முன்னேற்றச் செயல்பாட்டுச் சோதனைகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் தரவு கட்டமைப்பிலிருந்து பெறப்பட்ட மாதாந்த அறிக்கைகள் மூலம் கண்காணிக்கப்படுகிறது.<br><br>ஒரு குழு நியமிக்கப்பட்டு, பணியாளர் அலுவலர்கள் மற்றும் பிராந்திய தொழிலாளர் அலுவலகங்களுக்கான செயல்திறன் மதிப்பீடு மற்றும் முன்னேற்றப் பாராட்டுக்கான ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பைத் தயாரிப்பதற்கான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |